IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO.108/2015 E.P.NO. R.C.O.P.

Deposition of Witness DW -1

| | | |
|---|---|---|
| Name | : | பார்வதி |
| Father's Name /W/o | : | லேட். ரத்தினம் |
| Religion | : | இந்து |
| Caste | : | எம்.பி.சி. |
| Calling | : | இல்லக்கிழத்தி |
| Address | : | மாங்காட்டுச்சேரி, அரக்கோணம் தாலுக்கா. |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 02.07.2019

கு.வி. தொடர்ச்சி :

இந்த வழக்கில் சாட்சியம் அளித்த நாராயணசாமி என்பவரை எனக்கு தெரியும் அவரும் மாங்காட்டு சேரியை சேர்ந்தவர் தான். அவருக்கும் எனக்கம் முன்விரோதம் எதுவும் கிடையாது. தக்கோலம் காவல் நிலையத்தில் வாதி மீது தாவா சொத்தை மீட்டு கொடுக்குமாறு புகார் கொடுத்தது உண்மைதான். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் நான் காவல் நிலையத்தில் என்னுடைய நிலத்தை அவரிடம் இருந்து மீட்டு தருமாறு புகார் கொடுத்தேன். அந்த புகாரின் நகலை என்னுடைய பழைய வழக்கறிஞரிடம் தான் கொடுத்தேன். வழக்கு கட்டை நான் வாங்கி கொண்டு வந்து என் வழக்கறிஞரிடம் கொடுக்கவில்லை. என்னுடைய கணவர் வாதியிடம் இருந்து பணம் எதுவும் வாங்கவில்லை என்னிடமும் பணம் கொடுக்கவில்லை. வாதி கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தது உண்மைதான்.

நிலத்திற்கு பணம் எதுவும் பெறவில்லை என்றும் வாதி நிலத்தை திருப்பி தருமாறு கேட்டு தான் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது. தாவா சொத்தில் பயிர் செய்யுமாறு வாதியிடம் என் கணவர் தான் கொடுத்திருந்தார். தாவா சொத்தை பயிர் செய்வதற்காக எனக்கு மீட்டு கொடுக்கும்படி நான் எந்த நீதிமன்றத்திலும் வழக்கு போடவில்லை. என் கணவர் வாதியிடம் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்வதற்கும் அல்லது எதனடிப்படையில் எதற்காக கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு என்னுடைய வழக்கில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் முழுமையாக தெரியாது. இதே நீதிமன்றத்தில் வேறு ஏதாவது வழக்கு நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கும் இதே சொத்து குறித்ததாகும். அந்த வழக்கில் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டு இருந்ததால் வேறு வழக்கு போட வேண்டும் என்று என்னுடைய முந்தைய வக்கில் சொன்னதால் வேறு ஒரு வழக்கறிஞர் மூலம் வழக்கு போட்டேன். மேற்படி விவரங்களை நான் தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான். கூரைசீட்டு பாகப்பிரிவினை மூலம் என் கணவர் பாகத்திற்கு வந்த சொத்துக்களை நான் என் பாகம் என வழக்கிற்கு பின்னிட்டு விற்றது உண்மைதான். வாதி தனக்கு நிலம் வேண்டும் என்று கேட்டு தாவா போட்டு உள்ளார். அவர் நிலம் வேண்டும் என்று எதனடிப்படையில் எவ்வாறு வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி விவரம் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லப்பட்டுள்ள விக்கிரைய ஒப்பந்தத்தை நான் பார்க்கவில்லை அதில் எழுதப்பட்டுள்ள சரத்துக்களையும் நான் படித்துப் பார்க்கவில்லை. ஒப்பந்தத்தில் சொன்ன தேதியில் இருந்து வாதி பயிர் செய்து வருகின்றார் சரி. தாவா சொத்தில் பயிர் வைத்து வாதிதான் அனுபவித்து வருகிறார் எனக்கு எதுவும்பங்கு கொடுப்பது கிடையாது. வாதியிடம் பயிர் வைத்தற்கான பங்கு எதையும் நானோ என்

கணவரோ கேட்டதில்லை. நான் பயிர் வைக்க சென்றபோது தான் பிரச்சனை ஏற்பட்டது. வாதி எவ்வளவு விஸ்தீரண சொத்திற்கு வழக்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியாது.  தாவா சொத்தை வாதிக்கு கிரையம் கொடுக்க என்னுடைய கணவர் 03.11.1993 லேயே கிரைய ஒப்பந்தம் போட்டு அன்றைய தினமே 57500 ரூபாயை வாதியிடம் இருந்து பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. அன்றைய தினமே சொத்தின் சுவாதினத்தையும் வாதியிடம் ஒப்படைத்து விட்டு கிரைய பத்திரத்தை அழைக்கும் போது பதிவு செய்து தருவதாக சொல்லிஇருந்தார் என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.